# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.146/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கவேல் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.03.2025.

முதல் விசாரணை

நான் சங்கர் நகரில் வசித்து வருகிறேன். EB ல் போர் மேனாக பணிபுரிந்து 20 வருடங்களுக்கு முன் ஓய்வு பெற்றேன். எங்களுக்கு குழந்தை இலலை என்து அண்ணன் மகள் தனலட்சுமியை 9 வயதில் இருந்து வளர்த்து கல்யாணம் செய்து கொடுத்துவிடடேன் அவர்கள் கர்நாடகம் குண்டல் பேட்டையில் வசித்து வருகிறார்கள். என் மனைவிக்கு மூட்டு வலி என்பதால் கடந்த 21.08.2024 ம் தேதி யன்று மருத்துவமைன்கரு சென்று 7 நாட்கள் இருந்தோம் என் மனைவிக்கு முழங்கால் ஆபரேசன் நடந்தது. எனது கொழுந்தியா கன்னிகா பரமேஸ்வரி வீடான காரமடை டீச்சர் காலனிக்கு சென்று விட்டோம்.ஓய்வு எடுப்பதற்காகவும் மீண்ம 15 நாட்களுக்கு ஒருமுறை பரிசோதனை வேண்டி செல்ல வேண்டி இருப்பதால் அங்கு தங்கினோம். 1.09.2024 ம் தேதியன்று பக்கத்து வீட்டில் மேகலா என்பவர் காலையில எனக்கு போன் செய்து எங்கள் வீட்டின் கதவு பூட்டு உடைத்து திறந்து கிடப்பதாகவும், தகவல் கூறினார். தகவல் கிடைத்த ஆமபுலன்ஸ்ல் நானும் என் மனைவி அண்ணன் மருமகள் பத்மாவதி ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்தோம்.

வந்த பார்த்த போது போலிசார் அங்கிருந்தார்கள்.

2 வீட்டின் உள்ளே சென்று பார்க்க சொன்னார்கள். வீட்டின் கதவு, பீரோ நெம்பி உடைக்கப்பட்டிந்தது. நகை காணாமல் போயிருந்தது. தங்க செயின் – 4 பவுன், தங்க செயின் –3 பவுன் 1 ½ பவுன் தங்க வளையல் –3 ஆக மொத்தம் 11 ½ பவுன் தங்க நகைகளை உடைத்து எடுத்து சென்றனர்.காணாமல் போன நகைகள் அனைத்து பழைய நகைக்ள் ஆகும் 10–20 வருடத்திறகு முன்பு வாங்கியது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. புகார் கொடுததுபின்னிட்டு போலிசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும்நகைகள் கிடைத்தவுடன் தகவல் சொல்வதாக கூறினார்கள். நகைகளை திருடியவர்களை பிடித்து விடடதாகவும், நகைகள் கிடைத்து விட்டடதாகவும் நகைகளை நீதிமன்றத்தில மூலம் மனு தாக்கல் செய்து பெற்று கொள்ளும படியும் போலிசார் கூறினார்கள். நானும் என் மனைவியும மனு தாக்கல் செய்து நகைகளை பெற்று கொண்டோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் – 4 யிலும் உள்ள 3 வளையகள் 2 செயின்கள் எங்களுடையது தான். புகைப்படங்கள் – 4 எண்ணிக்கை அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. உள்ள நகைகள் தான் திருடுபோனது. அந்த நகைகளை தான் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டோம். தேவைப்பட்டால் நீதிமன்றத்ல் ஆஜர் படுத்த தயாராக உள்ளோம்.

1,3,4 <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார் கொடுக்கும் போகும் போது போலிசார் எழுதி கொடுத்ததில் கையொப்பம் செய்திர்களா என்றால் இல்லை அவர் ஒரு காப்பி எழுதி கொடுததார் நான் அதை பார்த்து எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தேன். மனைவி சிகிச்சைக்கு போனதகா ஆவணம் தாக்கல செய்யவில்லை என்றால் இல்லை கேட்கவில்லை அதனால் தாக்கல செய்யவி'ல்லை, தற்போது என்னிடம் உள்ளது. பக்கத்து வீட்டு மேகலா சொல்லி தான் தகவல் தெரியும் என்றால் சரிதான். உங்கள் வீடு கடைசியாக எப்போது பூட்டு போட்டதாக விசாரணையில் சொல்லவில்லை என்றால் 21 ம் தேதி நான் சென்ற போது பார்த்தேன். நகை உங்களுடையது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை நகை வாங்கி நிறைய ஆண்டு ஆனதால் பில் இல்லை.

2. விட்டின் கதவு பற்றிய விவரம் பற்றி சொல்லவில்லை என்றால் இல்லை. உங்கள் வீட்டில் நகை எதுவும் இல்லை என்றாலும திருடட்டு போகவும் இல்லை என்றாலும் சரியல்ல, திருட்டு போய்உள்ளது. போலிசார் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன

விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகார் காலதாமதமாககொடுத்துள்ளிர்கள் என்றால் நான் காரமடையில் இருந்து வந்து கொடுத்ததால் கால தாமதம் ஆனது. மனோகரன் தெரிந்தவர் என்றால் பக்கத்து விட்டுகாரர்.போலிசார் உங்களை சொன்ன நேரத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் இல்லை.

2 ம் <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகாரிலும் போலிசார் விசாரைணயிலும் செயின் மாடல், டிசைன் சொல்லியுள்ளிர்கள் என்றால் சொல்லவில்லை, வளையல் செயின் என்று மொத்தமாக சொல்லியுள்ளேன். +புகார் கொடுக்கும் போது வீட்டின் சாவியை கொடுத்திர்களா என்றால் இல்லை. பீரோ சாவியை கொடுத்திர்களா என்றால் இல்லை. பூட்டு உடைக்கப்பட்ட இருந் நிலையில் அதன் புகைப்படம் தாக்கல் செய்திர்களா என்றால் இல்லை. வீட்டில் கேமரா உள்ளதா என்றால் இல்லை. பக்கத்து வீட்டு பரஞ்சோதி வீ்டில் கேமரா உள்ளதா என்றால் இல்லை அங்கு யார் வீடடிலும் இல்லை. நீங்கள் வீட்டிற்கு போவதற்கு முன் போலிசார் அங்கிருந்தார் என்றால் ஆமாம். எத்தனை போலிசார் இருநதார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள் . புகாரிலும் போலிசார் விசாரைணயிலும் சம்பவ இடத்தில் போலிசார் இருந்தது பற்றி சொல்லியுள்ளிர்கள் என்றால் இல்லை. போலிசாருக்கு யார் தகவல் சொன்னதாக தெரியுமா என்றால் என் கொழுந்தியா காரமடையில் இருந்து சொன்னார். அவர் பெயர் என்ன என்றால் கன்னிகா பரமேஸ்வரி.

2. கன்னிகா பரமேஸ்வரி போலிசாருக்கு தகவல் சொன்னதாக தற்போது தான் முதல் முறையாக சொல்கிறிர்கள் என்றால் அவர் போனில் சொல்லியுள்ளார். சொன்ன நேரத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் இல்லை. புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் சாவியை அளித்திருப்பிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.